இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 289 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 16 – வெள்ளிக்கிழமை 30 மே 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 289 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 16 - Friday 30 May 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## தி.மு.க.வின் குரலால் இலங்கைச் சிறையிலிருந்து 1,354 மீனவர்கள் மீட்பு! – தொடரும் இன்னல்களைப் போக்க

# மீனவர்களுக்கு ஒரே தீர்வு கச்சத் தீவை மீட்பதுதான்!

## திருவொற்றியூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நல உதவிகளை வழங்கி உறுதிமிகு உரை!

**சென்னை, மே 30-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.05.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகம் உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

272 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய 400 ‘கில் நெட்’ படகுகள் 250 ஃபைபர் படகுகள் நிறுத்தும் வசதியோடு, 60 ஆயிரம் டன் மீன்களை கையாளக் கூடிய வசதிகளுடன் இருக்கும், இந்த சூரை மீன்பிடித் துறைமுகத்தை திறந்து வைத்து, உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.5.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில், 272 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சூரை மீன்பிடி துறைமுகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம், காதர்பாட்சா முத்துராமலிங்கம், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திருமதி.இரா.கஜலட்சுமி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்ட நடவடிக்கை!**

கடின உழைப்பால், தியாகத்தால், நம்முடைய பண்பாட்டின் ஒரு அடையாளமாக இருக்கக்கூடிய மீனவத் தோழர்களின் வளர்ச்சிக்கு, இந்த துறைமுகம் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். சென்னையின் வளர்ச்சியில் பழவேற்காட்டிலிருந்து கோவளம் வரைக்கும் மீனவ கிராமங்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது! இப்படிப்பட்ட மீனவர்களின் நலனையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பது என்பது நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டை காப்பதற்கு சமம்! அந்தக் கடமையை நம்முடைய திராவிட மாடல் அரசு சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது!

மீனவர்களின் நலனைக் காப்பதோடு, நம்முடைய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம்! அதனால்தான், கடந்த ஏப்ரல் 2ஆம் நாள் சட்டமன்றத்தில், கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று தனித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். கச்சத்தீவை மீட்பதுதான் தமிழ்நாட்டு மீனவர்களின் இன்னல்களுக்கு அது நிரந்தர தீர்வாக அமையும்!

**நமது மீனவர்களுக்காக 76 முறை பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன்!**

கடந்த நான்காண்டுகளில், 97 நிகழ்வுகளில், 185 படகுகளும், ஆயிரத்து 383 மீனவர்களும், இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள்! சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும்; படகுகளை மீட்க வேண்டும் என்று இந்தியப் பிரதமருக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், இதுவரைக்கும் எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன் என்று சொன்னால், 76 கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நேரில் சந்திக்கும் போதெல்லாம் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூட்டணி எம்.பி. களும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி உரிமைக்குரலை எழுப்பிய காரணத்தால்தான், இதுவரைக்கும் ஆயிரத்து 354 மீனவர்கள் விடுவிக்கப்பட்டி ருக்கிறார்கள்! எஞ்சிய 29 மீனவர்களையும் மீட்டு, தாயகம் அழைத்துகொண்டு வருவதற்கான தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்! இந்த நிலையிலும், 2018ஆம் ஆண்டு முதல் சிறைபிடித்த 229 படகுகளை இலங்கை அரசு இதுவரைக்கும் விடுவிக்கவில்லை. ஒருபக்கம் அவற்றை மீட்பதற்கான அரசியல் போராட்டத்தை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாலும், இதனால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்று மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதமும், 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீதமும் என்று 6 கோடியே 84 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்! இந்தத் தொகையை ஆறு இலட்சம் ரூபாயாக முதலில் உயர்த்தி, இப்போது எட்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறேன்!

2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில், சிறைபிடிக்கப்பட்ட இந்த மாவட்டங்களைச் சேர்ந்த 73 விசைப்படகுகளுக்கு 8 இலட்சம் ரூபாய் வீதமும், 9 நாட்டுப் படகுகளுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதமும் உயர்த்தப்பட்ட விகிதத்தில், மொத்தம் 6 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிவாரணம் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது!

இப்படி, மீனவர்களின் கண்ணீரைத் துடைக்கும் அரசாக ஆதரவுக்கரம் நீட்டக்கூடிய அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு இருந்து கொண்டிருக்கிறது! இந்த இன்னல்கள் எல்லாம் தீர கச்சத் தீவை மீட்பதுதான் ஒரே வழி! மீனவர்களின் நலன் காக்க நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கக்கூடிய திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் பட்டியலிட்டு சொல்ல வேண்டும் என்றால்,

- தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக, 19 ஆயிரத்து 997 பயனாளிகளுக்கு, பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித் தொகை திட்டங்களின்கீழ் 25 கோடியே 68 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.
- கடந்த 4 ஆண்டுகளில் 121 மீன்வள உட்கட்டமைப்பு அந்த பணிகளுக்காக மொத்தம் 1,849 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- 46 புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க 626 கோடியே 12 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 34 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- 29 மீன் இறங்குதள மேம்பாட்டு பணிகளுக்காக 85 கோடியே 52 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 17 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# தங்க நகைக் கடனுக்கான கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்க!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்கு கடிதம்!

**சென்னை, மே 30-**

**தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.5.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடும் இடையூறுகள்!**

அக்கடிதத்தில், விவசாயிகளின் 2 இலட்சம் ரூபாய் வரையிலான பயிர்க் கடன்களுக்கு தங்க நகைகளை ஈடாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தமிழ்நாடு அரசின் கடுமையான கவலை குறித்து தெரிவிக்கவே தாம் இக்கடிதத்தை எழுதுவதாக குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

தங்கத்தை பிணையாகப் பெற்று வழங்கப்பெறும் கடன்கள் சரியான நேரத்தில், குறுகிய கால பயிர்க்கடன்களுக்கான முதன்மை ஆதாரமாக விளங்குவதாகவும், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள் மற்றும் பால் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மீன்வளம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வரைவு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் பாதிப்படையக்கூடும் என்றும், அதனால் தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடுமையான இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**நகைக் கடனுக்கான கடும் கட்டுப்பாடுகள் பாதிப்பைத் தரும்!**

பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முறையான நில உரிமைகள் அல்லது சரிபார்க்கக்கூடிய வருமான ஆவணங்கள் இல்லை. அத்தகைய விவசாயிகள் தங்கள் வீட்டுத் தங்கத்தை அடகு வைத்து வங்கிக் கடன்களைப் பெறுவதற்கான ஒரு சாத்தியமான மற்றும் கண்ணியமான வழியாக நகைக்கடன் உள்ளது என்றும் தற்போது முன்மொழியப்பட்டுள்ள நெறிமுறைகளால் எளிதாகக் கடன் பெறும்



வழியை நேரடியாகக் குறைத்து, கடன் வாங்குபவர்கள் பெரும்பாலானோரை முறையான கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை நாடுவதை குறைத்துவிடும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நகைக்கடன் பெறும் எளிமையான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கிராமப்புற கடன் வாங்குபவர்கள் அதிக வட்டி விகிதங்களை வசூலிக்கும் முறைசாரா மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் வழங்கும் நிறுவனங்களை நோக்கிச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது அவர்களை சுரண்டல் நடைமுறைகளுக்கு ஆளாக்குவதுடன் கடனை அதிகரிக்கும் மற்றும் முறையான நிதி சேர்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தடுக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

**கடன் பெறும் விவசாயிகளை கடுமையாக பாதிக்கும் நிலை!**

மேலும், கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் வாங்குபவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக, சிறிய அளவிலான விவசாயக் கடன்களுக்கு கடன் பெறும் திறனை ஆவணமாக மதிப்பீடு செய்யும் முறையானது கிராமப்புறச் சூழலில் செயல்படுத்த முடியாததாக இருக்க வாய்ப்புள்ளது என்றும் இது கடன் வழங்கும் நடைமுறையில் தடைகளை உருவாக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைவு நெறிமுறைகள் கடன்களை தவறான வகைப்படுத்தலுக்கு வழிசெய்வதுடன், தணிக்கை தடைகளுக்கும் காரணமாக அமைந்து அதன் காரணமாக வங்கி மற்றும் கடனாளி இருதரப்பினருக்கும் பொறுப்பு அதிகரிக்கக் கூடும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி (தங்க பிணையத்திற்கு எதிராகக் கடன் வழங்குதல்) வழிகாட்டுதல்கள் 2025இல் முன்மொழியப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்திட இந்திய ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்துமாறு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதாகவும், நடைமுறையில் உள்ள கிராமப்புற கடன் வழங்குதலை அங்கீகரிக்கும் விதமாக, ரூ.2 லட்சம் வரையிலான விவசாய மற்றும் விவசாயம் தொடர்புடைய கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக தொடர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், கடன் கோருபவர்களின் நிதி அணுகலைப் பாதுகாக்கும் அதே வேளையில் கடன் பெறும் அளவினை மதிப்பிட ஒரு சமநிலையான ஒழுங்குமுறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று தான் கருதுவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, விவசாய சமூகத்திற்கும் கிராமப்புற பொருளாதாரத்திற்கும் அத்தியாவசியமான இந்த விவகாரத்தில் ஒன்றிய நிதியமைச்சர் கவனம் செலுத்தி தீர்வுகாண வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். இதே கருத்தை வலியுறுத்தி இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.